April 2017
இதழ் -2

# Gospel Truth
# காஸ்பல் ட்ரூத்

உலகளாவிய திருச்சபைகளின் ஊக்குவிப்பிற்கான வேதாகம விளக்கங்கள்

For Private Circulation Only

## அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை.

ஒரு இளைஞனுடைய கண்களிலிருந்து கண்ணீர் தாரை தாரையாக பெருக்கெடுத்து ஓடியது.அவன் தன் பாவங்களை உணர்ந்ததால் அழுகையோடு நின்று கொண்டிருந்தான்.

உலகின் இன்னொரு பகுதியில் வயது முதிர்ந்த ஒரு தாய் திருவுருவப்படம் ஒன்றின் முன் மண்டியிட்டு தன்னுடைய பணத்தையெல்லாம் காணிக்கையாக வைத்து விடுகிறாள்.

அதேபோல, ஒரு மூத்த குடிமகன் ஒருவர் வெகுதூர நடைபயணம் செய்து, மரிக்குமுன்,புனித ஸ்தலத்திற்கு சென்று சேர பிரயாசப்பட்டு பயணித்துக் கொண்டிருக்கிறான்.

இன்னொரு பக்கம்,ஒரு இளம் பெண் புனித சிலை ஒன்றின் முன் முழங்காற்படியிட்டு,கருப்பு அங்கி தரித்த பாதிரியாரிடம், தன் பாவங்களுக்காக மனம் கலங்கி வேண்டி நிற்கிறாள்.


அண்டை நாடு ஒன்றில், நூற்றுக்கணக்கான மக்கள் தங்கள் தெய்வத்திற்காக நெடுஞ்சாண்கிடையாய் விழுந்து வணங்கி, வழிபாடு செய்கிறார்கள்.

உலகின் ஒரு கண்டத்தில் அழகான உடை அணிந்த ஒரு ஆணும், பெண்ணும் தன் இரு குழந்தைகளுடன் சென்று ஏழைகளுக்கு உணவளிக்கிறார்கள்.

ஒரு தெருவோரத்தில் திருமணமாகாத ஆணும், பெண்ணும் மது அருந்தி காம விகார இச்சை கொண்டவர்களாய் அலைகிறார்கள்.

அசுத்த ஆவியால் பீடிக்கப்பட்டு, ஒரு இளம் மனிதன் மிகுந்த சத்தத்தோடு வாதிக்கப்பட்டவனாய் அலைக்கழிக்கப்பட்டு கொண்டிருக்கிறான்.

ஒரு தூர தேசத்தில் ஒரு தகப்பன் தன் வீட்டின் அறைக்குள்ளே பிரவேசித்து தன் மன அமைதிக்காகவும், சமாதானத்திற்காகவும் தன் கால்களை மடித்து உட்கார்ந்து தியான நிலையில் மௌனமாய் அமர்ந்திருக்கிறான்




மற்றொரு நாட்டில், சிலர் தம் தெய்வங்களுக்காக யாகம் வளர்த்து, அதன் புகை உயரும்போது தெய்வத்தின் கோபாக்கினை தணிந்து அமைதி நிலவ ஏற்பாடு செய்துள்ளனர்.

பல மைல் தூரத்தில் ஒரு சிறுமி ஆலயத் தூண்களுக்கு இடைப்பட்ட நடை பாதையில் ஓடி தன் போதகரிடம் கை கொடுத்துப் பேசிக் கொள்கிறாள்.

இவ்வாறு பல்வேறுபட்ட , நாடுகளில், பல நிலைகளில் மக்கள் வேறுபட்ட நம்பிக்கைகளையும், பழக்கங் களையும் கொண்டுள்ளனர்,

ஆனால் அவர்கள் எல்லாரும் நினைப்பதும் விரும்புவதும் ஒன்று மட்டுமே அவர்கள் சமாதானத்தையும் சந்தோஷத்தையும் நித்திய வாழ்வையும் தேடுகிறார்கள்.

மக்கள் தங்கள் ஆவிக்குரிய வாழ்வின் வெற்றிடத்தை நிரப்பும்படியாக, தங்களுடைய எல்லாவிதமான வாழ்வின் சந்தோஷத்திலும், போதகர்களிடமும், தீர்க்கதரிசிகளிடமும்,தியாகத்தினாலோ, அல்லது ஆலயத்திலோ அதை தேடி நாடுகிறார்கள். அவர்களுடைய இருதயமோ எனக்கு தூரமாய் இருக்கிறது என்று அறியாமல் இரட்சிப்பை தேடுகிறார்கள் (அப்போ4: 12). அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை நாம் இரட்சிக்கப்படும் படிக்கு வானத்தின் கீழெங்கும் மனுஷர்களுக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவுமில்லை.

பல மனிதர்கள் தங்களுடைய சமாதானத்திற்காக பலவற்றை தியாகம் செய்கிறார்கள். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் மனந்திரும்பாவிட்டால் இவையெல்லாம் வீணாய் இருக்கிறது.

| தலையங்கம் | வேதாகம வழிகாட்டி | வேத வாசிப்பு | கேள்விக்கென்ன பதில் | உங்களுக்குத் தெரியுமா/ சற்றே இளைப்பாறுவோம் |
|---|---|---|---|---|
| பக்கம் - 3 | பக்கம் - 4 | பக்கம் - 5 | பக்கம் - 7 | பக்கம் - 8 |

# வேதாகமம்

## நமக்கு போதிப்பது என்ன.....

**தேவனுடைய வார்த்தை**

2தீமோ 3 :16-17; 2பேது 1:20-21;

மத் 24:35

**அன்பு**

மத் 22:37-40; யோவா 14:21-23,

1 யோவா 4 : 7-11

**மனந்திரும்புதல் :**

அப் 3:19; 17:30; 2கொரி 7:10

**புதுசிருஷ்டி**

யோவா 3: 3-7; 2கொரி 5: 17; ரோம 6 : 1-4,

எபே 2 :1, 5-6

**பாவத்திலிருந்து விடுதலை**

1யோவா 5: 18; மத் 1: 21; யோவா 8: 11

**பரிசுத்த ஆவியால் நிரப்பப்படுதல்**

அப் 1: 8; 15: 8-9;19: 2

**பரிசுத்தம் :**

லூக் 1: 73-75; எபி 12 : 14; 1பேது 1:15-16;

தீத்து 2: 11-12; ரோம 6:22

**தேவனுடைய இராஜ்யம்**

லூக் 17: 20-21; ரோம 14 :17;யோவா 18:36.

**சபை**- அப் 2 :47; எபே 4 :4-6;

1கொரி 12 :12-13; கொலோ 1:18;

**ஒற்றுமை**

யோ 17: 20-23; கலா 3:28; வெளி 18:2-4;

**நியமங்கள்**

மத் 28 :19-20; 26-26-30; 1கொரி 11 :23-27;

யோவா 13 :14-17

**தெய்வீக சுகமளிப்பு**

லூக் 4 : 18, ஏசா 53 :4,5, யாக் 5 :13-16

**விவாக முறைமை**

மத் 19 : 5-6; லூக் 16 :18; ரோம 7 : 2-3;

1கொரி 7 :10,11;

**வெளிப்புற தோற்றம்**

1தீமோ 2 :9-10; 1கொரி 11 :14-15; உபா 22 :5;

**கடைசிகாலம்**

2பேது 3 : 7-12; யோவா 5 :28,29;

2 கொரி 5 :10; மத் 25 :31-46;

**தொழுதுகொள்ளுதல்**

யோவா 4: 23,24; எபே 5 :19;

2கொரி 3 :17;

**சுவிசேஷம் அறிவித்தல்**

மாற் 16 :15;



# தலையங்கம்

இயேசுகிறிஸ்துவின் இரத்தத்தால் சகல பாவங்களும் சுத்திகரிக்கப்பட்டதை எண்ணி என் இதயமெல்லாம் நன்றியோடு கர்த்தரை ஸ்தோத்தரிக்கிறேன். இது என்னுடைய நல்நடக்கையினால் அல்ல.தேவனுடைய இரக்கத்தினாலே மீட்கப்பட்டேன்.மேலும் மிக முக்கியமான காரியம் வேதத்தை அலசி ஆராய்ந்து தேவ இரட்சிப்பையும், வல்லமையையும் வாழ்வில் அனுபவிப்பதே, ஒவ்வொரு நாளும் நான் பாவமன்னிப்பை பெற்ற தேவ பிள்ளையாய் வாழ்கிறேன் என்று எண்ணி நித்திரைக்குச் செல்லும்போது தேவன் அமைதியான நித்திரையை தருகிறார்.நாம் நித்திரை செய்து எழுவது தேவ கிருபையே அல்லாமல் நம் சுயபலத்தினால் அல்ல.ஏனென்றால் அவரே நம் வல்லமையுள்ள பாதுகாவலர்.இந்த இதழில் நான் பாவம் மற்றும் இரட்சிப்பைக் குறித்த வேத விளக்கங்களை தெளிவுபடுத்தியுள்ளேன்.இதன்மூலம் தவறான போதனைகளை விட்டு விலகி, தெளிவான வேத சத்தியத்தை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பதே என்னுடைய தீராத வாஞ்சையாயிருக்கிறது.

உங்கள் ஜெபமே எங்களைத் தாங்குகிறது.தேவ நம்பிக்கையில் உறுதியாய் நிற்கும்படி என்னுடன் பணியாற்றும் உடன் ஊழியர்களை நான் அதிகமாய் உற்சாகப்படுத்துவதுண்டு.உலகமாகிய யுத்தகளத்தில் விசுவாசத்தில் நின்று உறுதியாய் ஜெபிப்போமாக!

## காஸ்பல் ட்ரூத்

கர்த்தரின் சத்தியத்தை உலகமெங்குமுள்ள சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கித்து, ஊக்கப்படுத்தி, உற்சாகப்படுத்துவதுதான் இந்த இதழின் முக்கிய நோக்கம்.கிறிஸ்துவின் நாட்கள் தொடங்கி அப்போஸ்தலர்கள் காலமட்டும் பிரசங்கித்து வந்த கிறிஸ்துவின் சத்தியத்தையே நாங்களும் இந்த இதழ் வாயிலாக அறிவிக்கிறோம்.

கர்த்தரின் வசனமே விசுவாசத்திற்கு ஊன்றுகோலாகும்.அதுவே பாவமன்னிப்பின் நிச்சயத்தையும், இரட்சிப்பையும் நமக்குத் தருகிறது.பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலும், வல்லமையும், அனுதின வாழ்வின் பரிசுத்தமும் நம்மில் வளர வழி வகுக்கிறது.சத்தியத்தின்படி அன்பை போதித்து கர்த்தருக்குள் வழி நடத்த பிரயாசப்படுகிறோம்.

## இணையதள சேவை

எங்களுடைய இந்த இதழை ஆன்லைனில் படிக்க ***www.thegospeltruth.org*** என்ற இணையதள முகவரியை பார்க்கவும்.மேலும் உங்களது ***email*** மூலமாகவும் எங்களோடு தொடர்பு கொள்ளலாம்.உங்களது நண்பர்கள் மற்றும் தெரிந்தவர்களுக்கு இந்த இதழை அறிமுகம் செய்யுங்கள். அவர்களது முகவரிகளையும் எங்களுக்கு தெரியப்படுத்துங்கள்.

## தொடர்புக்கு

தமிழ்மொழியல்லாது வேறு பல மொழிகளிலும் இந்த இதழை அச்சிட்டு வெளியிடுகிறோம். இந்த பத்திரிகை தொடர்ந்து வெளிவர ஆதரவு தாருங்கள். தேவ சபையின் மூலமாய் நடைபெறும் அனைத்து வகையான ஊழியங்களுக்காகவும் ஜெபித்துக் கொள்ளுங்கள்.உங்களது கருத்துக்களை எதிர்பார்க்கின்றோம்.

**ஆசிரியர், காஸ்பல் ட்ரூத், 2/227 - கோலார்பட்டி**

**பொள்ளாச்சி வட்டம், தென் இந்தியா - 642 107**

# இரட்சிப்பு
## நான் என்ன செய்ய வேண்டும்?

# முதற்படி

### 1. விசுவாசம்

சத்தியத்தை உண்மையென்று முழுமையாக ஏற்றுக் கொண்டு, நம்பிக்கையோடு வளர வேண்டும்.

**அப் 16 : 30, 31** அவர்களை வெளியே அழைத்து வந்து ஆண்டவமாரே இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்றான். அதற்கு அவர்கள் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி. அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்.

**யோவான் 3 : 16** தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.

**ரோமர் 10 : 9** கர்த்தராகிய இயேசுவை நீ உன் வாயினாலே அறிக்கையிட்டு, தேவன் அவரை மரித்தோரிலிருந்து எழும்பினாரென்று உன் இருதயத்திலே விசுவாசித்தால் இரட்சிக்கப்படுவீர்கள்.

### 2. அழைப்பு

இயசே கிறிஸ்துவினிடத்தில் வேண்டிக் கொள்ளுங்கள்.

**ரோமர் 10 : 13** கர்த்தருடைய நாமத்தை தொழுது கொள்ளுகிற எவனும் இரட்சிக்கப் படுவான்.

### 3. அறிக்கை பண்ணுதல்

**ரோமர் 10 : 10** நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும் இரட்சிப்புண்டாக வாயினாலே அறிக்கை பண்ணப்படும்.

**1யோவான் 1 : 9** நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி, நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.

**நீதி 28 : 13** தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான்.

### 4. மனந்திரும்பு

உங்கள் பாவங்களுக்காக மனஸ்தாபப்பட்டு, உங்கள் பொல்லாத வழிகளை விட்டு கர்த்தரிடத்திற்கு திரும்புங்கள்.

**அப் 3 : 19** உங்கள் பாவங்கள் நிவிர்த்தி செய்யப்படும் பொருட்டு நீங்கள் மனந்திரும்பி குணப்படுங்கள்.

**2 கொரி 7:10** தேவனுக்கேற்ற துக்கம் பின்பு மனஸ்தாபப்படுகிறதற்கு இடமில்லாமல் இரட்சிப்புக்கேதுவான மனந்திரும்புதலை உண்டாக்குகிறது லௌகிக துக்கமோ மரணத்தை உண்டாக்குகிறது.

**ஏசாயா 66 : 2** என்னுடைய கரம் இவைகளையெல்லாம் சிருஷ்டித் ததினால் இவைகளெல்லாம் உண்டாயின என்று கர்த்தர் சொல்லுகிறார்;

ஆனாலும் சிறுமைப்பட்டு ஆவியில் நொறுங்குண்டு என் வசனத்துக்கு நடுங்குகிறவனையே நோக்கிப் பார்ப்பேன்.

### 5. ஏற்றுக்கொள்ளுதல்

அவருடையவர்களாகும்படி அவரை ஏற்றுக் கொண்டு இரட்சிக்கப்படுவார்கள்.

**யோவான் 1 : 12** அவருடைய நாமத்தின் மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்.

# இரண்டாம்படி

### 1. ஞானஸ்நானம் பெறுங்கள்

தேவநியமத்தின்படி, தண்ணீரில் மூழ்கி, ஞானஸ்நானம் பெறுவதே ஒருவருடைய பாவங்கள் கழுவப்பட்டதற்கும், கிறிஸ்துவுக்குள் மறுபிறப்படைந்ததற்கும் அடையாளமாகும்.

**அப் 2 : 37, 38** நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவ மன்னிப்புக்கென்று இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள்

**மத் 28 : 19 நீங்கள் புறப்பட்டு போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி,**

## ஒரு பாவியின் ஜெபம்



*அன்புள்ள இயேசுவே, நீர் பிதாவாகிய தேவன் என்று விசுவாசிக்கிறேன். நீர் என்னுடைய பாவங்களுக்காக சிலுவையில் மரித்தீர். என்னுடைய மீறுதல்களுக்காக நான் துக்கப்படுகிறேன். நீர் சிந்தின இரத்தத்தின் வல்லமையினால் என்னை முற்றிலும் கழுவி பரிசுத்தப்படுத்துவீராக. உம்மை என் நேசராக நான் ஏற்றுக்கொள்கிறேன். என் உள்ளத்தில் வாரும் இயேசுவே. என் பாவ வாழ்க்கைக்காக மீண்டும் ஒருவிசை மன்னிப்பு கோருகிறேன். என் ஜெபத்தை கேட்பவரே உமக்கு நன்றி. நித்திய ஜீவ வாழ்வை தந்தவரே உமக்கு ஸ்தோத்திரம். என் வாழ்நாள் முழுவதும் உம்மை தேட, ஆராதிக்க என்னை ஒப்புவிக்கிறேன்*

*– ஆமென்*

**பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுங்கள்.**

### 2.இழப்பீடுகள்

பிறரிடமிருந்து எடுத்துக் கொண்டதையும், அவர்கள் இழந்ததையும் மீண்டும் உரிமையுள்ளவர்களிடம் ஒப்படைக்கும் நிலை.

**லூக் 19 : 8,9 சகேயு** நின்று கர்த்தரை நோக்கி ஆண்டவரே என் ஆஸ்திகளில் பாதியை எழைகளுக்குக் கொடுக்கிறேன் நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான்.

### 3. மன்னியுங்கள்

மனதால் உணரப்பட்ட குற்றத்தை மனங்கசந்து விட்டுவிடுவதால் தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம்

**மாற் 11 : 25, 26** நீங்கள் நின்று ஜெபம் பண்ணும் போது ஒருவன் பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால் பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்த குறையை அவனுக்கு மன்னியுங்கள்.




### வேத வாசிப்பு

**ரோமர் 6 : 13-18** நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரி லிருந்து பிழைத்திருக்கிறவர்களாகத் தேவனுக்கு ஒப்புக் கொடுங்கள். நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்பட்டிராமல் கிருபைக்குக் கிழ்ப்பட்டிருக்கிறபடியால் பாவம் உங்களை மேற்கொள்ள மாட்டாது. இதினால் என்ன? நாம் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்பட்டிராமல் கிருபைக்குக் கிழ்ப்பட்டிருக்கிறபடியால் பாவஞ்செய்யலாமா? கூடாதே. மரணத்துக் கேதுவான பாவத்துக் கானாலும் நீதிக்கேதுவாக கீழ்ப்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக் கொடுக்கிறீர்களென்று அறியீர்களா?

முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம். பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு நீதிக்கு அடிமைகளானீர்கள்.

# வேதாகம வழிகாட்டி

## பொருள் : பாவம்

### I.பாவத்தின் தோற்றம்

**A.**ரோமர் 5 : 12 ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது.

**B.**ரோமர் 5:19 ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டார்கள்.

### II.பாவ சுபாவமுள்ள மனுஷன்

**A.**ஆதி 8 :21 மனுஷனுடைய இருதயத்தின் நினைவுகள் அவன் சிறுவயது தொடங்கிப் பொல்லாததாயிருக்கிறது.

**B.**எபே 2 : 2-3 சுபாவத்தினாலே மற்றவர்களைப் போலக் கோபாக்கினையின் பிள்ளைகளாயிருந்தோம்.

**C.**ரோம 7:14,15 நானோ பாவத்துக்குக் கீழாக விற்கப்பட்டு மாம்சத்திற் குரியவனாயிருக்கிறேன்.

**D.**எரே 17 :9 எல்லாவற்றைப் பார்க்கிலும் இருதயமே திருக்குள்ளதும், மகா கேடுள்ளதுமாயிருக்கிறது.

### II.பாவத்தின் உருவாக்கம்

**A.**மாற் 7 : 20-23 பொல்லாங்கானவை களாகிய இவைகளெல்லாம் உள்ளத்திலிருந்து புறப்பட்டு மனுஷனைத் தீட்டுப்படுத்தும் என்றார்.

**B.**மத் 15 :18 இருதயத்திலிருந்து புறப்பட்டு வருகிற அவைகளே மனுஷனைத் தீட்டுப்படுத்தும்.

### III.எல்லாரிடத்திலும் பாவமுண்டு

**A.** ரோம 3 :23 எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களாகி...

**B.**ரோம 3 : 9 யூதர் கிரேக்கர் யாவரும் பாவத்திற்குட்பட்டவர்கள்.

**C.**1யோவா 1 :8-10 நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம்.

### IV.பாவஞ்செய்கிறவன் பிசாசினால் உண்டானவன்

**A.**1யோவா 3 :8 பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்.

### V.பாவஇருளினால் ஒளியினிடத்திற்கு பிரவேசிக்கலாகாது

**A.**யோவா 15 : 22-24 பாவத்தைக்குறித்துப் போக்குச் சொல்ல அவர்களுக்கு இடமில்லை.

**B.**யோவா 9 :41 நீங்கள் குருடராயிருந்தால் உங்களுக்கு பாவமிராது.

**C.**ரோம 5 :13 நியாயப்பிரமாணம் இல்லாதிருந்தால் பாவம் எண்ணப்படமாட்டாது.

### VI.சோதனை பாவமல்ல

**A.**மத் 4:1 இயேசு பிசாசினாலே சோதிக்கப்பட்டார்.

**B.**எபி 4 :15 தேவகுமாரனாகிய இயேசு எல்லாவிதத்திலும் நம்மைப்போல சோதிக்கப்பட்டும், பாவமில்லாதவராயிருக்கிற பிரதான ஆசாரியர் நமக்கிருக்கிறார்.

**C.**யாக் 1 :14,15 இச்சையானது கர்ப்பந்தரித்து, பாவத்தைப் பிறப்பிக்கும்.பாவம் பூரணமாகும்போது மரணத்தைப் பிறப்பிக்கும்.

### VII. பாவத்தின் வல்லமை

**A.**ரோம 7 :14-15 நானோ பாவத்திற்கு கீழாக விற்கப்பட்டு, மாம்சத்திற்குரியவனாயிருக்கிறேன்.

**B.**ரோம 7 :23 என் அவயவங்களில் உண்டாயிருக்கிற பாவப்பிரமாணத்துக்கு என்னைச் சிறையாக்கிக் கொள்ளுகிறது.

## VIII. பாவத்தின் விளைவுகள்

**A.**ஏசா 59:2 உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது.
**B.**யாக் 1:15 பாவத்தின் சம்பளம் மரணம்.
**C.**யோவா 8 :34 பாவஞ்செய்கிறவன் எவனும் பாவத்துக்கு அடிமையாயிருக்கிறான்.

## IX. பாவத்தின் பெலன்கள்

**A.**யோவா 8 :21-24 நானே அவர் என்று நீங்கள் விசுவாசியாவிட்டால், உங்கள் பாவங்களிலே சாவீர்கள்.
**B.**ரோம 6 :23 பாவத்தின் சம்பளம் மரணம்
**C.**சங் 9 :17 துன்மார்க்கரும், தேவனை மறக்கிற எல்லா ஜாதிகளும் நரகத்திலே தள்ளப்படுவார்கள்.
**D.**மத் 25 : 46 இவர்கள் நித்திய ஆக்கினையை அடையவும்...
**E.**வெளி 21 :8 இரண்டாம் மரணமாகிய அக்கினியும் கந்தகமும் எரிகிற கடலிலே பங்கடைகிறார்கள்.

## X. நியாயப்பிரமாண பலிகளினாலே பாவம் நிவிர்த்தியாகாது.

**A.**எபி 10 :1-4 காளை, வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்தி செய்ய மாட்டாதே.
**B.**1ராஜா 8 :46 பாவஞ்செய்யாத மனுஷன் இல்லையே
**C.**ரோம 8 :3 மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம்...
**D.**1கொரி 15 :56 மரணத்தின் கூர் பாவம்

## XI. கிறிஸ்துவுடன் ஒப்புரவாக்கப்படுதல்

**A.**சகரியா 13:1 பாவத்தையும், அழுக்கையும் நீக்க ஒரு ஊற்று உண்டாயிருக்கிறது.
**B.**மத் 1 :21 இயேசு, தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார்.
**C.**ரோம 5 :10-12 ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே
**D.**1யோ 4 :10 நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே.
**E.**எபி 9 :26 கிறிஸ்து தம்மைத்தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும் பொருட்டாக ஒரேதரம் வெளிப்பட்டார்.
**F.**1யோ 3 :5 இயேசுகிறிஸ்து நம்முடைய பாவங்களை சுமந்து தீர்க்க வெளிப்பட்டார்.

## XII.பாவங்களற வாழ வழிகள்

**A.**யோவா 8 :11 நீ போ, இனி பாவஞ்செய்யாதே
**B.**ரோம 6 :12 சாவுக்கேதுவான உங்கள் சரீரத்தில் பாவம் ஆளாதிருப்பதாக.
**C.**1 கொரி 15 :34 நீங்கள் பாவஞ்செய்யாமல் இருங்கள்.

## XIII.பாவமில்லாமல் வாழ வைக்கும் வல்லமை

**A.**2கொரி 5:17 பழையவைகள் ஒழிந்து போயின.
**B.**1யோ5 :18 தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான்.
**C.**1யோ 1 :7 இயேசுகிறஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும்.
**D.**யோ 8 :36 குமாரன் உங்களை விடுதலையாக்கினால் மெய்யாகவே விடுதலையாவீர்கள்.
**E.**ரோம 6 :13-18 நீங்கள் நியாயப்பிரமாணத்திற்குக் கீழ்ப்பட்டிருக் கிறபடியால் பாவம் உங்களை மேற் கொள்ளமாட்டாது.

**F.**தீத்து2 :11,12 நாம் தெளிந்த புத்தியும், நீதியும், தேவ பக்தியும் உள்ளவர்களாய் இவ்வுலகத்திலே ஜீவனம் பண்ணி..
**G.**1பேது 2:21,22 கிறிஸ்துவும் உங்களுக்காகப் பாடுபட்டு நீங்கள் தம்முடைய அடிச்சுவடுகளைத் தொடர்ந்து வரும்படி உங்களுக்கு மாதிரியை பின் வைத்துப் போனார்.

## பாவத்தின் வரையறைகள் (புதிய ஏற்பாடு)



1. நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம்.
1யோவான் 3 :4

2. அநீதியெல்லாம் பாவந்தான்.
1யோவான் 5:17

3.ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும், அதை செய்யாமற்போனால் அது அவனுக்குப் பாவமாயிருக்கும்.
யாக்கோ 4 :17

4.விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே.
ரோம 14 :23

# கேள்விக்கு என்ன பதில்?

**கேள்வி :** பெரும்பாலான கிறிஸ்தவர்கள் சொல்வதுண்டு, ஒவ்வொருவரும் ஒவ்வொரு நாளும் சிறியதாகவோ, பெரியதாகவோ பாவஞ்செய்தே வாழ்ந்து வருகிறார்கள்.பாவஞ்செய்யாமல் ஒரு கிறிஸ்தவனால் வாழ முடியுமா?

**பதில் :** ஆம், உண்மையான கிறிஸ்தவர்களால் பாவஞ்செய்யாமல் வாழ முடியும்.இது ஒருவருடைய சொந்த பெலத்தினாலோ அல்லது தனிப்பட்ட நபருடைய திறமையினாலோ சாத்தியமல்ல.

அது **இயேசுகிறிஸ்து** மூலமாய் ஒருவன் தேவனுடைய வல்லமையைப் பெற்று, விடுதலையை உணரும்போது மாத்திரமே பாவஞ்செய்யாமல் வாழ முடியும்.பாவம் என்கிற இந்த வார்த்தை பல வழிகளில் உபயோகப்படுத்தப்படுகிறது.எனவே நாம் தவறுதலுக்கும் பாவத்துக்கும் உள்ள வித்தியாசத்தை அறிந்து செயல்படுவது அவசியமாகும்.

**எல்லாரும் பாவஞ்செய்கிறார்கள்**

ஆம்,எல்லாரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றவர்களாகி..(ரோமர் 3 :23).

அனைவருமே பாவிகளாக இருக்கிற பட்சத்தில் எந்தவொரு மனிதனாலும் தானே முயன்று பாவமற்றவனாய் வாழ்வது கடினம்.

அன்று மோசேயின் நியாயப்பிரமாணம் ஜனங்களுக்குக் கொடுக்கப்பட்டது. அதின்பிரகாரம் மீறி நடக்கிற யாவரும் தேவனுக்கு பலி செலுத்துவதினாலே அவனுடைய மீறுதல் அவனுக்கு மன்னிக்கப்படும்.காளை, வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவிர்த்தி செய்ய மாட்டாதே (எபி 10 :4 ).

**மோசேயின் நியாயப்பிரமாணம் பூரணமானதல்ல**

மாம்சத்தினாலே பெலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக் கூடாததை தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனை பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார்.இயேசுகிறிஸ்து மனிதனாய் இந்த பூமிக்கு வந்து, நமக்காக இரத்தஞ் சிந்தி, மரித்து, மீண்டும் உயிர்த்து, மனுக்குலத்தை பாவத்தினின்று இரட்சித்து, ஒவ்வொருவரையும் மீட்டார்.

இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மை சுத்திகரிக்கும் ( 1 யோவா 1 :7). பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும்படிக்கே தேவனுடைய குமாரன் வெளிப்பட்டார் (1யோவா 3:8).

நியாயப்பிரமாணத்தினால் பூரணமாக்கப்படாமலிருந்ததை இயேசு தாமே செய்து காட்டினார். மனிதன் பாவத்திற்குள்ளாகவே வாழ்ந்து கொண்டேயிருந்தால், இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமைக்கு என்ன அவசியம்?

**இயேசுவே மீட்பர்**

அநேக வேத சத்தியங்கள் நமக்கு இதை தெளிவுபடுத்துகிறது.ஒருவன் கிறிஸ்துவுக்குள்




மறுபடி பிறக்கும்போதுதான் பாவத்திலிருந்து மீட்டெடுக்கப்படுகிறான்.அவர் தமது ஜனங்களின் பாவங்களை நீக்கி அவர்களை இரட்சிப்பார் (மத்1:21).

பாவம் உங்களை ஆளாதிருப்பதாக. நீங்கள் நியாயப்பிரமாணத்திற் கேற்றபடியல்ல.தேவமகிமைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறீர்கள். முன்னே நீங்கள் பாவத்திற்கு அடிமைகளாயிருந்தும், இப்பொழுது உங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட உபதேச சட்டத்திற்கு நீங்கள் மனப்பூர்வமாய் கீழ்ப்படிந்ததினாலே தேவனுக்கு ஸ்தோத்திரம் (ரோம 6:14,15).

பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள்-ரோ 6 :17,18. வேதம் இதிலிருந்து நமக்கு தெளிவாக உணர்த்துவது ஒருவன் தேவனுடைய சத்தியத்திற்கு முற்றிலும் கீழ்ப்படியும்போது, இயேசுகிறிஸ்து அவனுடைய பாவத்தையும் எல்லா அநியாயத்தையும் நீக்கி,பாவத்திலிருந்து விடுதலையாக்க வல்லவர் .அப்படி மீட்டெடுக்கப்படுவதே இரட்சிப்பிற்கான வழி.

**போ, இனி பாவஞ்செய்யாதே**

விபசாரத்திலே கண்டுபிடிக்கப்பட்ட ஒரு ஸ்திரீயைப் பார்த்து இயேசுகிறிஸ்து, போ, இனிப் பாவஞ்செய்யாதே என்றார் (யோவா 8:11). இந்த வேத வாக்கியம் மேலும் நமக்கு உணர்த்துவது என்னவென்றால் தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான் (1 யோவா 3:9). இயேசுகிறிஸ்துவின் இரத்தம் இந்த பாவமனுக்குலத்திலிருந்து ஒவ்வொருவரையும் விடுவிக்கும் வல்லமை கொண்டது.

இப்படியிருக்க ஒருவன் கிறிஸ்துவுக்குள்ளிருந்தால் புது சிருஷ்டியாயிருக்கிறான்.பழையவைகள் ஒழிந்து போயின.எல்லாம் புதிதாயின (2கொரி 5 :17). இயேசுகிறிஸ்துவின் வல்லமையினால் ஒருவன் மீட்படைவது எவ்வளவு அற்புதமானது.கிறிஸ்தவன் - இயேசுகிறிஸ்துவின் சீஷன்.இயேசுகிறிஸ்து பாவஞ் செய்யவில்லை (1 பேது 2 :21,22). பலதரப்பட்ட இந்த சமுதாயத்தில் வாழ்கிறவர்கள் அநீதியுள்ளவர்களாகவே இருக்கிறார்கள்.

**தவறுகள் பாவமாகுமா?**

ஒரு கேள்வி எழுகிறது.நீங்கள் சொல்கிறீர்கள்.ஒரு கிறிஸ்தவன் ஒருபோதும் பாவஞ்செய்யமாட்டான் அல்லது தவறு செய்ய மாட்டான் என்று இங்குதான் நாம் தெளிவாக பாவம் எது என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.கிறிஸ்தவன், கிறிஸ்துவை விட்டு விலகி பாவத்திற்குள்ளாக் கப்படுகிறான்.ஆனால் பின்பு அவன் கிறிஸ்தவனாய் இருக்க முடியாது. வேத சத்தியத்தின் பிரகாரம் பாவஞ்செய்யாமல் வாழ தேவ கிருபையும் வல்லமையும் நமக்கு அருளப்பட்டிருக்கிறது.

**கிறிஸ்தவர்களின் வளர்ச்சி**

நாம் கிறிஸ்தவர்களாக இருந்தபோதும் கூட, நாம் எல்லா மனிதர்களையும் போலவே நடந்து கொள்கிறோம். அதனால்தான் தேவ ஞானம் அற்றவர்களாய் மீறுதல்களுக்குட்பட்டு நடக்கிறோம்.ஆவியின் கனியைப் பெற்று, கர்த்தருடைய கிருபையினாலே கிறிஸ்துவுக்குள் அனுதினமும் வளர வேண்டும்.நம்முடைய கர்த்தரும், இரட்சகருமாகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையிலும் அவரை அறிகிற அறிவிலும் வளருங்கள்(2 பேதுரு 3 :18). கிறிஸ்தவன் என்பவன் கிறிஸ்துவைப் பிரதிபலிக்கும் வண்ணம் ஆவிக்குரிய வாழ்வில் நடந்தேற வேண்டும்.நாம் இந்தகாலத்தில் மவுனமாயிராமல் தேவ கிருபைக்கும், வல்லமைக்கும் ஒப்புக் கொடுத்து வளர்ச்சியடைய வேண்டும்.

**இருதயக்கடினம்**
அவருடைய இளைப்பாறுதலில் பிரவேசிப்பதற்கேதுவான வாக்குத்தத்தம் நமக்குண்டாயிருக்க, உங்களில் ஒருவனும் அதை அடையாமல் பின்வாங்கிப் போனவனாகக் காணப்படாதபடிக்குப் பயந்திருக்கக்கடவோம்–எபி 4:1.

பாவத்தை நினைத்தாலே அது தவறாகும். ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் அவளோடே விபச்சாரம் செய்தாயிற்று என்று வேதம் நமக்கு உணர்த்துகிறது. அதனால் தேவனுடைய கிருபையும், வல்லமையுமே நம்மை பாவத்திலிருந்து மீட்க வல்லது.

**பாவம் பிரிவினையை உண்டாக்கும்**
உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது (ஏசா 59:2).

ஒருவருடைய தவறுகள், மீறுதல்கள் மன்னிக்கப்பட்டு விட்டால், அவை தேவனிடத்தில் பிரிவினையை உண்டாக்குவதில்லை. மோசேயின் மூலம் தேவனுடைய பத்து கற்பனைகள் கொடுக்கப்பட்டது. சீனாய் மலையில் தேவன் நமக்கு கொடுத்த கற்பனைகளை வெறும் கட்டளைகளாக பார்க்காமல், இருதயத்தின் ஆழத்திலிருந்து கடைபிடித்து கிறிஸ்துவுக்குள் வாழ பழகுங்கள் (மத் 5-7)

**பாவம் -வரையறை**
புதிய ஏற்பாடானது நமக்கு 4 விதமான வரையறைகளை பாவத்தைப் பற்றி தருகிறது. இவையாவும் தேவனுக்கும் மனிதனுக்கும் பிரிவினையை உண்டாக்குகிறது.

1.நியாயப்பிரமாணத்தை மீறுகிறதே பாவம் (1யோவான் 5:17)
2.அநீதியெல்லாம் பாவந்தான் (1 யோவான் 3 :4)
3.ஒருவன் நன்மை செய்ய அறிந்தவனாயிருந்தும், அதை செய்யாமற்போனால் அது அவனுக்குப் பாவமாயிருக்கும் (யாக்கோ 4 :17)
4.விசுவாசத்தினாலே வராத யாவும் பாவமே (ரோம 14 :23)



**சாத்தானை எதிர்க்கும் தேவனுடைய வல்லமை**
மோசேயின் நியாயப்பிரமாணத்தை மீறாமலும் தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொண்டும் வாழ தேவ வல்லமை உதவுகிறது.

திருடர்களும், பொய்யரும், ஏமாற்றுபவர்களும், கொலை பாதகர்களும், விபச்சாரிகளும் ஒருபோதும் கிறிஸ்தவர்கள் அல்ல. மேலும் யார் உண்மையான கிறிஸ்தவன் என்றால், இப்படிப்பட்ட பாவங்களை செய்ய பிரியப்படாமலிருப்பவனே. அது நம்முடைய இருதயம் தேவனுக்கு முன்பதாக பரிசுத்தமாயிருக்கும்போது மாத்திரமே வருகிறது.சில நேரங்களில் பொய் சொல்லும் அல்லது களவு செய்யும் எண்ணங்களை அல்லது சூழ்நிலைகளை சாத்தான் கொண்டு வருவான். அவ்வேளையில் இயேசுகிறிஸ்துவின் வல்லமையினால் அந்த பாவ எண்ணங்கள் தகர்க்கப்பட்டு போகும்.

அதனால் இருதயத்தின் எண்ணங்களால் அநீதி செய்வதோ மீறுதல்களை உண்டாக்கும் சிந்தனையின்றி வாழ தேவன் உதவி செய்கிறார். ஒரு உண்மையான கிறிஸ்தவன், தேவனுடைய கற்பனைகளை அறிந்திருக்கிறான். அவற்றிற்கு கீழ்படியாதது பாவம்.எது சரியானது என்று உணர்ந்து, தேவனுக்கு பயந்து வாழ வேண்டும்.ஒரு கிறிஸ்தவன் அவ்வாறு வாழ அறிந்திருக்கிறான்.

**இரட்சிப்பு உன் வாழ்வை மாற்றும்**
தேவனிடத்திலிருந்து மனிதனை தனிமைப்படுத்தும் பாவங்களை விட்டு விலகி வாழ ஜனங்கள் அறிந்திருக்கிறார்கள். ஆவியின் கனிகளை கடைபிடித்து வாழவும், தேவனிடத்தில் நெருங்கி சேரவும் இரட்சிப்பு வழி வகுக்கிறது.ஒருவனுடைய இருதயம் பரிசுத்தமாயும் பாவமற்றதாயும் இருக்கும்போது பாவத்தை வெறுத்து, பரிசுத்தமாய் வாழ முடியும்.

தேவனுடைய கிருபை நமக்குப் போதும். வாழ்வின் கஷ்ட, நஷ்டங்களில் நம்மை காத்து, மீட்டெடுத்து, பாவமில்லாமல் வாழும் வல்லமையைக் கொடுத்த தேவாதி தேவனுக்கு நன்றி!

**Printed Matter -Posted Under Rule 114 & 121 P&T Guide**
**Indian Constitution Act 25th & 19(1) Section**
**TAMIL EDITION**

உங்களுக்குத் தெரியுமா

**பைபிள் என்ற வார்த்தையானது கிரேக்க வார்த்தை BIBLIA யிலிருந்து வந்தது.அர்த்தம் : புத்தகம்**
**பைபிள் மொத்தம் 66 புத்தகங்களையும் 1189 அதிகாரங்களையும் கொண்டது.**
**பழைய ஏற்பாட்டில் மொத்தம் 39 புத்தகங்கள்**
**புதிய ஏற்பாட்டில் மொத்தம் 27 புத்தகங்கள்**
**பவுல் அப்போஸ்தலன் 14 புத்தகங்களை புதிய ஏற்பாட்டில் எழுதியுள்ளார்**
**பழைய ஏற்பாடானது எபிரெய பாஷையில் எழுதப்பட்டது**
**புதிய ஏற்பாடானது கிரேக்க பாஷையில் எழுதப்பட்டது**
**ஏற்பாடு என்ற வார்த்தைக்கு ஒப்பந்தம் அல்லது உடன்படிக்கை என்று அர்த்தம்**



ஏற்ற சமயத்தில் ஒரு வார்த்தை

## சற்றே இளைப்பாறுவோம்

**அவர் அவர்களை நோக்கி, வனாந்திரமான ஓரிடத்தில் தனித்துச் சற்றே இளைப்பாறும்படி போவோம் வாருங்கள் என்றார்.ஏனெனில் வருகிறவர்களும், போகிறவர்களும் அநேகராயிருந்தபடியினால் போஜனம் பண்ணுகிறதற்கும் அவர்களுக்குச் சமயமில்லாதிருந்தது - மாற் 6 : 31**

இயேசுகிறிஸ்துவும், அவருடைய சீஷர்களும் ஓய்வில்லாமல் தேவனுடைய ராஜ்ஜியம் கட்டப்படும்படியாய், ஜனங்களை ஆயத்தம் பண்ணவும் சுவிசேஷத்தை எங்கும் திரிந்து பிரசங்கிப்பதில் கவனமாயிருந்தார்கள் அதனால் இயேசுகிறிஸ்துவின் சீஷர்கள் ஆவியிலே சோர்ந்து போய் களைத்து,வருத்தமடையத் தொடங்கி மன அழுத்தத்துடன் காணப்பட்டார்கள்.



இயேசு அவர்களை அழைத்து, சற்றுநேரம் ஜனக்கூட்டத்தை விட்டு, சற்று அப்புறம் போய் இளைப்பாறி, மீண்டும் திரும்பி வந்து தேவனுடைய சுவிசேஷத்தை ஜனங்களிடையே அறிவிக்கலாம் என்றார்.நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார். நாம் மண்ணென்று நினைவு கூருகிறார் – சங் 103:14.மாம்சம் பலவீனமுள்ளது.அதனால்தான், ஓய்வெடுக்க வேண்டியது அவசியமானதென்று தேவன் அறிந்திருக்கிறார்.

உண்மையான தேவ ஊழியர்களும், சுவிசேஷகர்களும் தம்மேல் இருக்கிற சுவிசேஷ பாரத்தை சுமந்து கொண்டு ஜனங்களைத் தேடி, ஓடி சுவிசேஷம் அறிவித்துக் கொண்டு வருகிறார்கள்.இது மாதிரியான சமயங்களில் ஆத்தும பாரத்தால் தேவைகளினாலும் மிகவும் மூழ்கடிக்கப்பட்ட நிலைக்கு தள்ளப்படுகிறார்கள்

ஆவிக்குரிய எங்களுடைய சபையில், மூத்த போதகர் ஒருவர் இவ்வாறாக கூறினார்.சில சமயங்கள் நாம் செய்ய வேண்டிய மிக முக்கியமான காரியம் ஒரு குட்டித்தூக்கம்.

தேவ ஊழியர் ஒவ்வொருவரும் சற்று இளைப்பாறி, மீண்டும் வந்து தேவ பணியை தொடர்வதே மிகவும் நன்மையானது.தேவ அழைப்பின் நிமித்தமும், சுவிசேஷ பாரத்தினாலும் தேவஊழியர்கள் அவ்வாறாக ஓய்வின்றி பணியில் செயல்படும் நிலையில் உள்ளனர்

பல போதகர்கள் நரம்பு தளர்ச்சியினாலும், சிலர் உடல் சுகவீனங்களினாலும் பாதிக்கப்பட்டுள்ளனர்.சில நாட்கள் அல்லது சில வாரங்கள் நமது தேவபணியை விட்டு, தூரமாய் வனாந்திரமான இடங்களுக்குச் சென்று, இளைப்பாறி திரும்பும் போது, ஆவி,ஆத்துமா, சரீரத்தில் புத்துணர்ச்சியும், புது பெலனும் அடைகிறோம்.

இந்த தருணங்கள் நமக்கு புதிய எண்ணங்களையும், தெளிவான கரிசனையையும் உருவாக்கும். இளைப்பாறும் போது தான் மனதின் சிந்தனைகள் தெளிவாகிறது. இயேசு கிறிஸ்துவைப் போல நாமும் சற்று இளைப்பாற நேரம் எடுத்துக் கொள்ளலாம்.

**ஆன்லைனில்**

**அதிகமாக தெரிந்துகொள்ள**

*www.thegospeltruth.org*

**தொடர்புக்கு:-**
**ஆசிரியர்,**
**காஸ்பல் ட்ருத்**
**2/227 – கோலார்பட்டி**
**பொள்ளாச்சி - வட்டம்**
**தென் இந்தியா - 642 107**

**The Editor,**
**Gospel Truth,**
**2/227 - Kolarpatti**
**Pollachi -Taluk**
**South India - 642 107.**

**Email :**
**editor@thegospeltruth.org**

**கர்த்தருக்கு பரிசுத்தம்**

**Tamil Editor : W.S.Vedha, Phone : 04259 - 280488 Cell: 95975 62641**
**Publisher : V.Jayanathan Gnanarajan, Mailing Dept : V.Selvam**
**Printer : Joy Printers, Pollachi - 642 001. Cell : 96592 54316**